மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை 09.12.2025 கதிர் 403

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel


# யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவில் பேராசிரியர் வேல்நம்பி முன்னிலையில்!





யாழ்ப்பாணம், டிசெ 10.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான திருநாவுக்கரசு வேல்நம்பி புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கிறார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரால் கடந்த செப்ரெம்பர் முதல் வாரத்தில் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் நேற்று, 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை 7

# மண்ணுக்குள் புதைந்துள்ள உடல்களில் இருந்து துர்நாற்றம்

## மலையகத்தில் தொடரும் சோகம்



நுவரெலியா. டிச. 09

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, இறம்பொடை, கெரண்டியெல்ல உள்ளிட்ட பகுதிகளில் மண்ணுள் புதைந்துள்ள உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசி வருகின்றது என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்

குறித்த பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு பலர் மண்ணுக்குள் புதையுண்டனர். அதிலிருந்து பலரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

எனினும், மீட்கப்படாத சடலங்களில் இருந்தே இந்தத் துர்நாற்றம் வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பேரிடர் என்பதால், மண்ணுக்குள் அநேகமான சடலங்கள் புதையுண்டிருக்கலாம் என்பதைச் சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க ஏற்றுக்கொண்டார்.

எனினும், புதையுண்டிருக்கலாம் என நம்பப்படும் உடலங்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் எவ்வித தொற்றுநோய்களும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஜனவரி 12 முதல் 20 வரை



கொழும்பு, டிச. 09

இவ்வருட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பேரிடர் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட பாடங்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் 7

## 4 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் மக்கள் உடனடியாக வெளியேற்றம்



கண்டி, டிச. 09

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள மூன்றாம் நிலை சிவப்பு நிற மண்சரிவு அபாய எச்சரிக்கையை அடுத்து, கண்டி, கேகாலை, குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை, பாதுகாப்பான மையங்களுக்கு வெளியேறுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 7

## வவுனியா மாநகர சபைக்கு எதிரான இடைக்காலத் தடை நீடிப்பு!

வவுனியா, டிச. 09

வவுனியா மாநகர சபைக்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாநகர சபையின் மேயர், பிரதி மேயர் ஆகியோர் அந்தப் பதவிகளை வகிப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவை விதித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி தடை உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் மூன்றாவது முறையாக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் உள்ளிட்ட சட்டத்தரணிகள், வழக்கு பிரதி மேயருக்கு எதிராக உள்ளமையால் சபை நடவடிக்கைகளை நடத்துவதற்கு அனுமதி கோரினர்.

இதற்கு மனுதாரர் தரப்பு ஜனாதிபதி 7

# தொடர்ந்தும் குறைக்கப்படும் பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்



கொழும்பு, டிசெ.9

எதிர்கால மழை முன்னறிவிப்புகளுக்கு அமைய, நாட்டின் பல பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் தற்போது மேலும் குறைக்கப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய அனுராதபுரம் மாவட்டத்தின் நாச்சதுவ மற்றும் ராஜாங்கனை, தெதுரு ஓயா, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுணுகம்வெஹெர மற்றும் வெஹெரகல, அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் சேனாநாயக்க சமுத்திரம் ஆகியவற்றின் நீர்மட்டத்தைக் குறைப்பதற்காக தற்போது நீர் திறந்து விடப்பட்டு வருவதாக அத்திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் (நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்), பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இவ்வாறு விடுவிக்கப்படும் நீரினால் தாழ்நிலப் பகுதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என சூரியபண்டார குறிப்பிட்டார்.

தற்போதைய முன்னறிவிப்புகளின்படி எதிர்காலத்தில் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதால், இந் நிலைமைகளைக் கண்காணிப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகங்கள் 24 மணி நேரமும் திறந்திருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிலைமைகள் குறித்து தொடர்ந்து அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். மேலும், பருவமழை தற்போது தீவிரமடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளதால்,

இது குறித்து அவதானமாக இருப்பது முக்கியம் என்றாலும், தற்போதைய நிலவரப்படி இதுவரை எவ்வித ஆபத்தான நிலையும் ஏற்படவில்லை என பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார மேலும் தெரிவித்தார். (ஐ)

# பண்டாரநாயக்க நிதியம் 250 மில்லியன் ரூபா நிதியுதவி



கொழும்பு, டிசெ.9

இலங்கையில் ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியம் அரசாங்கத்தின் நிவாரண நிதிக்கு 250 மில்லியன் ரூபாயை வழங்கியுள்ளது.

இந்த நிதியை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நிகழ்வில், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிந்தும சுனில் சேனவி மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

# அனர்த்தங்களால் 638 பேர் மரணம்

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 638 ஆக அதிகரித்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் மேலும் 191 பேர் காணாமல்போயுள்ளனர்.

இதேவேளை, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 20 ஆயிரத்து 373 குடும்பங்களைச் சேர்ந்த 63 ஆயிரத்து 628 பேர் 630 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



# காணாமல் போனோர் மற்றும் உயிரிழந்தோரின் இறப்புப் பதிவு ஆரம்பம்



கொழும்பு, டிசெ.9

"டித்வா" சூறாவளி நிலைமை காரணமாக ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்த அல்லது காணாமல் போன நபர்களின் இறப்பைப் பதிவு செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கிறது.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்தத் திணைக்களம், இந்த அனர்த்தத்தினால் எவரேனும் ஒரு நபரின் உறவினர் அல்லது நண்பர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பின், அத்தகைய காணாமல் போன நபர்களின் இறப்பைப் பதிவு செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டுகிறது.

தேசிய அனர்த்தப்பகுதிகள், நிர்வாக மாவட்டங்கள் அடிப்படையில் இறப்பைப் பதிவுசெய்வதற்கான தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ், டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கிறது.

அதற்கமைய, இந்த அனர்த்தத்தின் கீழ் காணாமல் போன நபர் ஒருவரின் இறப்பைப் பதிவு செய்யக் கோரும் நபர், அந்த நபர் வழக்கமாக வசித்த பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடம் தகவல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவத்தையும், அத்தகவல்களை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

கிராம உத்தியோகத்தர் இந்தக் கோரிக்கையைப் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிப்பார் என்பதுடன், பிரதேச செயலகத்திலும் மற்றும் சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் இரண்டு வார காலத்திற்கு ஆட்சேபனைகளுக்காக இது காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனப் பதிவாளர் நாயகம் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஆட்சேபனைகள் இல்லையெனில், பிரதேச செயலாளரால் அனுமதிக்காகப் பதிவாளர் நாயகத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வலயத்திற்குப் பொறுப்பான பிரதி அல்லது உதவிப் பதிவாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டால், அது குறித்து விசாரணை நடத்திப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கிறது.

இதன் கீழ், நபர் ஒருவர் காணவில்லை என்பதற்கான சான்றிதழ் கோரப்பட்டிருக்கும் போது, மேற்கூறியவாறு விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு, உரிய விசாரணைகளை மேற்கொண்டு, பிரதேச செயலாளரால் 'காணவில்லை என்பதற்கான சான்றிதழை' வெளியிடவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.

இதற்கிடையில், கடந்த நாட்களில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாகப் பல ஆவணங்கள் சேதமடைந்துள்ளதாக தேசிய சுவடிகூடம் (யேவழையெட யுசஉாளைநள) தெரிவிக்கிறது.

கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான சேதம் ஏற்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நதீரா ரூபசிங்க குறிப்பிட்டார். (ஐ)



## அனர்த்தப் பகுதிகளைப் பார்வையிட செல்வதை தவிர்க்கவும்! பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.9

அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளுக்குச் செல்வது மிகவும் ஆபத்தானது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நிவாரணப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் '117' என்ற துரித இலக்கம் மூலம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிவாரணங்களை வழங்கும் போது மாவட்டச் செயலாளர் ஊடாக உரிய முறைமைக்கு அமைய அந்தச் செயற்பாட்டை முன்னெடுக்குமாறு தெரிவித்தார். கனமழை காரணமாக மண் ஈரப்பதத்துடன் உள்ளமையினால் விழிப்புடன் இருக்குமாறும், சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படும் போதெல்லாம் உடனடியாக குறித்த இடங்களை விட்டு வெளியேறுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

அனர்த்தத்திற்கு உள்ளான இடங்களைப் பார்வையிடுவதற்கு வருவதைத் தவிர்க்குமாறும் அது மிகவும் ஆபத்தானது எனவும் தெரிவித்தார். வெள்ள நீர் மிகவும் வேகமான நீரோட்டத்துடன் பாய்வதாகவும், அதனால் நீரில் குளிப்பதையும், களியாட்டங்களில் ஈடுபடுவதையும் தவிர்க்குமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அதேநேரம், இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த நிவாரணக் குழுக்கள் செய்து வரும் பணிகளைப் பாராட்டிய அவர், அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார (ஐ)

## பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைக்கத் திட்டம்!




இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு பொது நன்கொடையாளர்களின் உதவியுடன் தற்காலிக வீடுகளை விரைவாகக் கட்டியெழுப்ப திட்டமிட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழுப்பில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமை காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்து 'சௌமிய தான யாத்ரா' மூலம் நிவாரண பொதிகளை வழங்கி வைத்திருந்தோம். உடைமைகளை இழந்து தற்காலிக இடம்பெயர்ந்து பாடசாலைகள் கலாசார நிலையங்களில் தங்கியுள்ள தோட்டத் தொழிலாளர்களின் உடனடி அவல நிலையை பார்க்க முடிந்தது.

பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் உள்ள முதன்மையான கவலை என்னவென்றால், அவர்கள் சேதமடைந்த தங்கள் வீடுகளுக்கு திரும்புவார்களா அல்லது நிரந்தரமாக புதிய நிலங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்களா என்பது குறித்த எதிர்கால நிச்சயமற்ற தன்மைதான்.

தோட்ட நிர்வாகத்துடனான கலந்துரையாடல்களின் போது, மீளக்குடியமர்வுக்கான மாற்று நிலங்களை அடையாளம் காணும் முக்கியமான பணியைத் தொடங்குவதற்கு முன்னர், அவர்கள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் அறிக்கைக்காகக் காத்திருப்பதாகத் தெரியவந்தது.

தற்காலிகத் தங்குமிடங்களில் நீண்ட காலம் தங்குவதைத் தடுக்கும் நோக்குடன் இலங்கை முதலாளிகள் சங்கத்தின் பொது நிர்வாக இயக்குனர் வஜிர உடன் இன்று கலந்தாலோசித்தேன். அனைத்து 22 நிறுவனங்களும் மாற்று நிலங்களை முன்கூட்டியே அடையாளம் காணும் அவசியமான செயல்முறையை உடனடியாகத் தொடங்கும்படி அறிவுறுத்த வலியுறுத்தினேன்.

இதன் மூலம், அறிக்கைகள் இறுதி செய்யப்பட்டவுடன், பொது நன்கொடையாளர்களின் உதவியுடன் தற்காலிக வீடுகளை விரைவாகக் கட்டியெழுப்ப முடியும் என்றார். (ஐ)

## வெள்ளத்தில் 8000 க்கும் மேற்பட்ட ஏக்கர் நெல் வயல்கள் பாதிப்பு!

கந்தளாய் குளத்தின் பத்து வான்கதவுகள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், அப்பகுதியிலுள்ள 8000 மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. பரட்டைக்காடு, செட்டிக்காடு, தம்பலகாமம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, பத்து நாட்கள் மட்டுமே ஆன நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துவிட்டன. வெள்ளம் வடிந்த பின் வயல் நிலங்கள் முழுவதும் மணலும் சேறும் படிந்துள்ளதால், விவசாயிகள் தாம் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர். இந்தச் சேதம் அடுத்த போக விவசாய நடவடிக்கைகளையும் பாதிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு மற்றும் நிவாரணங்களை வழங்குவதுடன், வயல் நிலங்களைச் சீரமைக்க நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாய அமைச்சகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியன விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



# த.வெ.க.,வுக்கு ஓட தயாராகும் அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள்



செங்கோட்டையனை தொடர்ந்து, அ.தி.மு.க.,வை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரும், த.வெ.க.,வில் சேர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவருடன் முன்னாள் எம்.எல்.ஏ., இருவரும் சேர உள்ளதாக கூறப்படுகிறது. விஜய் முன்னிலையில், அ.தி.மு.க.,வை சேர்ந்த மூத்த நிர்வாகியும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன், த.வெ.க.,வில் இணைந்தார். அவருக்கு, கட்சியின் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் பதவி வழங்கப் பட்டுள்ளது. அவரை தொடர்ந்து, தி.மு.க., - அ.தி.மு.க., - ம.தி.மு.க.,வில் அரசியல் பேச்சாளராக வலம் வந்த நாஞ்சில் சம்பத், த.வெ.க.,வில் இணைந்தார். அவருக்கு பிரசார செயலர் பதவி வழங்கப்பட்டது. அ.தி.மு.க.,வை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் சிலரும் கட்சி தாவ உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுகுறித்து ஏற்கனவே செங்கோட்டையன், ‘இம்மாதத்திற்குள் த.வெ.க., கூட்டணி மேலும் வலுப்பெறும். அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்களில் யார் யார் சேருகின்றனர் என்பதை பொறுத்திருந்து பாருங்கள்’ என கூறியுள்ளார். டிச. 16ம் தேதி ஈரோட்டில் விஜய் பிரசாரம் செய்ய திட்டமிட்டுள்ளார். அதற்கான கூட்டத்திற்கு, போலீசில் அனுமதி கேட்கப்பட்டு உள்ளது. அந்த கூட்டத்தில், விஜய் முன்னிலையில், முன்னாள் அமைச்சர் ஒருவர் தலைமையில், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள், முன்னாள் மாவட்ட செயலர்கள் என, 10க்கும் மேற்பட்ட நிர்வாகிகளை, த.வெ.க.,வில் சேர்க்க செங்கோட்டையன் ஏற்பாடு செய்துள்ளார்.

கட்சி வட்டாரங்கள் கூறியதாவது: சமீபத்தில் பெங்களூருவில் செங்கோட்டையனும், த.வெ.க., பிரசார மேலாண்மை பொதுச்செயலர் ஆதவ் அர்ஜுனாவும் சந்தித்து பேசினர். அப்போது, விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த, அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஒருவர் தலைமையில், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் ராஜவர்மன், தமிழரசன், கன்னியாகுமரி மாவட்ட செயலர் அசோகன் மற்றும் திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டச் செயலர்கள் உட்பட, 10க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் த.வெ.க.,வில் இணைவது தொடர்பாக பேசப்பட்டுள்ளது.

த.வெ.க.,வில் இணைய விரும்பும் அ.தி.மு.க., முக்கிய பிரமுகர்கள் சிலர், தென் மண்டல ஒருங்கிணைப்பாளர், மாவட்டச் செயலர் போன்ற முக்கிய பதவிகளை தர வேண்டும் என, சில நிபந்தனைகள் விதித்துள்ளனர். அதில், ஏற்கனவே பா.ஜ., - தே.மு.தி.க., உள்ளிட்ட கட்சிகளில் இருந்து, அ.தி.மு.க.,வுக்கு வந்த ‘மாஜி’க்கு மாநில பொறுப்பு வழங்க, த.வெ.க., தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின. (ஐ)



## புதுச்சேரி தவெக கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் வந்தவர் கைது!

புதுச்சேரியில் தவெக கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் வந்த நபர் கைது செய்யப்பட்டார்.

தவெக தலைவர் நடிகர் விஜய் இன்று புதுச்சேரியில் கட்சியின் பொதுக் கூட்டத்தில் பேசுகிறார். உப்பளம் மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள பொதுக்கூட்டத்திற்கு தமிழகத்தில் இருந்து யாரும் வரக்கூடாது, மொத்தம் 5000 பேருக்கு மேல் அனுமதி இல்லை என்று கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன.

கரூர் சம்பவத்திற்கு பின்னர் திறந்த வெளி அரங்கில் நடிகர் விஜய் கலந்து கொள்ளும் முதல் கூட்டம் என்பதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீசார் செய்துள்ளனர். கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து அவற்றை போலீசார் கண்காணித்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, கூட்டத்திற்கு வருபவர்களை மெட்டல் டிடெக்டர் உதவியுடன் போலீசார் சோதனை செய்து அனுப்பிக் கொண்டு இருந்தனர். அப்போது வரிசையில் வந்த நபர் ஒருவரை போலீசார் சோதித்தனர். சோதனையில் அந்த குறிப்பிட்ட நபர் கைத்துப்பாக்கி வைத்திருந்ததை கண்டுபிடித்தனர்.

அவரை தனிமைப்படுத்திய போலீசார் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தினர். முதல் கட்ட விசாரணையில் துப்பாக்கியுடன் வந்தவர், சிவகங்கை மாவட்ட தவெக செயலாளர் பிரபு என்பவரின் தனிப் பாதுகாவலர் டேவிட் என்பது தெரிய வந்தது. அவரை உடனடியாக போலீசார் கைது செய்தனர். கைத்துப்பாக்கியை எதற்காக எடுத்து வந்தார், அதற்கான உரிமம் முறைப்படி இருக்கிறதா, எங்கிருந்து வாங்கப்பட்டது என்பது குறித்த விசாரணையில் போலீசார் தீவிரமாக இறங்கி உள்ளனர. (ஐ)

## தமிழகத்தில் திமுக துடைத்தெறியப்படும்

ஆமதாபாத்: 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் திமுக துடைத்தெறியப்படும், இதனை ஸ்டாலினுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் என்று மத்திய அமைச்சர் அமித் ஷா ஆவேசமாக கூறினார்.



குஜராத்தில் பல்வேறு அரசு திட்டங்களை உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். அப்போது நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தவர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அமைச்சர் அமித் ஷா பேசியதாவது்

2014ம் ஆண்டு லோக்சபா தேர்தல் முதற்கொண்டு தற்போது வரை பாஜ தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. 2024 லோக்சபா தேர்தலில் 3வது முறையாக மோடி பிரதமர் ஆனார். பல ஆண்டுகளுக்கு பின் நிகழ்த்தப்பட்ட சாதனை இது.

அனைத்துத் துறைகளிலும் நம் நாடு வளர்ச்சி கண்டு, உலக நாடுகள் மத்தியில் சிறந்த நாடாக மாறும் என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். எதிர்க்கட்சிகளில் தலைவர்களோ, கொள்கைகளோ இல்லை. நாட்டில் எங்குமே அவர்களை மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை.

உங்கள் முன்னால், இந்த மேடையில் இருந்து கொண்டே மம்தா பானர்ஜி, ஸ்டாலின் ஆகியோருக்கு நான் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். பீஹாரையடுத்து, மேற்கு வங்கம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணியானது, தேர்தலில் அமோகமாக வென்று பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தம். நீங்கள் அதற்கு தயாராக இருங்கள்.

2026ம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வெளியாகட்டும். மேற்கு வங்கத்தில் திரிணமுல் காங்கிரசும், தமிழகத்தில் திமுகவும் துடைத்தெறியப்படும்.

இவ்வாறு உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசினார். அவரின் பேச்சைக் கேட்ட அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் கரவொலி எழுப்பி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன. வெகு விரைவில் அமித் ஷா தமிழகம் வர உள்ள சூழலில், முதல்வர் ஸ்டாலின் பெயரை மேடையில் குறிப்பிட்டு, அரசியல் ரீதியாக அமித் ஷா பேசி இருப்பது, குறிப்பிடத்தக்க ஒன்றாக பார்க்கப்படுகிறது.(ஐ)

## புதிய விமான நிறுவனத்தை துவக்க வேண்டிய நேரமிது

“முறையாக திட்டமிடப்படாததே, ‘இண்டிகோ’ விமான நிறுவனத்தின் பிரச்னைக்கு காரணம். விமானத் துறையில் உள்ள வாய்ப்புகளை பங்குதாரர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாட்டில் புதிய விமான நிறுவனத்தை துவக்க வேண்டிய நேரமிது,” என, விமான போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இந்த புதிய நடை முறை, நவ., 1 முதல் அமலுக்கு வந்தது. இதற்கு, நம் நாட்டில் அதிக விமா ன சேவைகளை வழங்கும், தனியார் துறையைச் சேர்ந்த பிரபல விமான நிறுவனமான இண்டிகோ கடு ம் எதிர்ப்பு தெரிவித்தது.

முன்னெப்போதும் இல்லாத வகையில், அந்நிறுவனத்தின் விமான சேவைகள் நாடு முழுதும் முடங்கின. இதனால் ஆயிரக்கணக்கான பயணியர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூழலை பயன்படுத்தி மற்ற விமான நிறுவனங்கள், திடீரென விமான கட்டணத்தை பல மடங்கு உயர்த்தின. இதை கவனத்தில் கொண்ட மத்திய அரசு, விமான கட்டணங்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயித்தது.

இந்நிலை யில், ‘இண்டிகோ’ விவகாரம் தொடர்பாக, ராஜ்யசபாவில், தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த விமான போக்குவரத்து அமை ச்சர் ராம் மோகன் நாயு டு நேற்று கூறியதாவது: இது, ‘இண்டிகோ’ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட செயல்பாட்டு பிரச்னை. விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களுக்கான பணி அட்டவணையை அந்நிறுவனம் முறையாக திட்டமிடாததே இதற்கு காரணம்.

நவ., 1ம் தேதி கூட, அந்நிறுவனத்தின் உயர்அதிகாரிகளுடன் விமான போக்குவரத்து அமைச்சகம் ஆலோசனை நடத்தியது. அவர்களின் அனைத்து சந்தேகங்களுக்கும் உடனடியாக தீர்வு அளிக்கப்பட்டது. எனினும், அந்நிறுவனம் முறையாக திட்டமிடவில்லை. இது அந்நிறுவனத்துக்கு மட்டுமல்ல, விமான போக்குவரத்து துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் ஒரு பாடம். ‘இண்டிகோ’ விவகாரத்தை மிகவும் தீவிரமாக கவனத்தில் கொண்டுள்ளோம்.

அது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது. விமானத் துறையில் உள்ள வாய்ப்புகளை பல்வேறு நிறுவனங்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். புதிய விமான நிறுவனத்தை துவக்க வேண்டிய நேரமிது. இது தொடர்பாக தொழில் நிறுவனங்களுடன் கலந்து ஆலோசிக்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.





# பயத்தை வெல்லலாம்!

தெனாலியில் சொல்வது போல் நின்றால் பயம், நடந்தால் பயம் என்று இல்லாவிட்டாலும் நம் அனைவருக்கும் ஏதோ ஒரு பயம் இருக்கத்தான் செய்கிறது. வெளியே தெரியாவிடினும் அது நம் முழு உயரத்தை அடைய தடையாக இருக்கிறது.

பயம் என்கிற உணர்ச்சியே ஆபத்து நேரத்தில் நம்மைத் தற்காத்துக்கொள்ள, அடுத்த நடவடிக்கை எடுக்க யோசிக்க இயற்கை நமது மூளைக்கு அளித்த கொடை.

ஆனால், நாம் பயம் என்கிற அளவிலேயே நம்மைச் சுருக்கிக்கொள்கிறோம். அதைத் தாண்டி வர முயற்சிப்பதில்லை.

இந்தப் பய உணர்ச்சி உடலில், உள்ளத்தில் பல்வேறு விதமாகப் பாதிப்பு ஏற்படுத்துகிறது. ரத்தத் கொதிப்பு, திடமிழக்கும் நரம்புகள், அளவுக்கு மீறிய பயத்தால் மூளையின் முடிவெடுக்கும் திறன் பாதிப்பு என நமது செயல்களை ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் சுருக்கிவிடுகிறது. அதனால் வெற்றியின் சாத்தியக்கூறும் சுருங்கிவிடும்.

உதாரணமாக ஒருவருக்கு மோசமான விபத்து நடந்து அதிலிருந்து உடலால் முழுதாகத் தேறினாலும், மனதால் முழுமையாக வெளிவருவாரா என்றால், இல்லை. விபத்து ஏற்படுத்திய விளைவு ஆழ்மனதில் அழுத்தமாகப் பதிந்ததால் எப்போது வாகனம் ஓட்டினாலும் அந்தப் பயம் வந்து மனதில் ஆட்சி செய்யும், பதற்றம் அதிகமாகி தவறு நேரும் போது மறுபடியும் விபத்து நிகழலாம். இதற்குக் காரணம் உங்கள் ஆழ்மனப் பதிவும் அதன் வெளிப்பாடாக உங்கள் பதற்றமும்தான். ஆனால், நான் பயந்தது போலவே ஆகிவிட்டதென வாகனம் ஓட்டுவதைத் தவிர்ப்போம்.

எல்லாவிதமான பயங்களும் தவறா என்றால் நிச்சயம் இல்லை.

‘அஞ்சுவது அஞ்சாமை பேதமை’ என்கிற வள்ளுவர் வாக்கின்படி எதற்கு அஞ்ச வேண்டுமோ அதற்கு நிச்சயம் அஞ்ச வேண்டும், எல்லாவற்றிற்கும் அல்ல.

இயற்கையான பய உணர்வு உங்களை எச்சரிக்கும், முடக்காது, எதிரே ஒற்றை யானையைப் பார்த்தால், 150 கி.மீ. வேகத்தில் மகிழுந்து ஓட்டினால், ஆள் அரவமற்ற இடத்தில் தனி வீடு கட்டிக் குடியேறினால், இரவில் நிறைய நகைகளோடு நடமாடினால் நம் மூளை அதில் உள்ள ஆபத்தை நினைவுப்படுத்தி எச்சரிக்கும். இது போன்ற பயங்கள் நமக்குத் தேவை. இது இப்போது செய்யும் காரியம் ஆபத்தை விளைவிக்கும், அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தேவை என மனித மூளை நமக்கு அளிக்கும் சமிக்ஞைகள். இதை வீண் பயம் என்று ஒதுக்காமல் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இவை எந்த நேரமும் மனதை ஆக்கிரமிக்காது. எப்போது தேவையோ அப்போது மட்டுமே வெளிப்படும்.

ஆனால், நம் ஆழ் மனப் பதிவினால் வரும் பயம் எப்போதும் மனதில் ஓடிக்கொண்டிருக்கும். எப்போது சாலையில் கால் வைத்தாலும் விபத்தாகிவிடும் என நம் செயல்களை முடக்கும். இதை எப்படிச் சரி செய்வது?

இது நிச்சயம் சரியாகக்கூடியதுதான், தொடர் முயற்சியால் சாத்தியபடாதது எதுவும் இல்லை. ஆனால், முதலில் நம்மைப் பரிவோடு அணுக வேண்டும்.

இது சரி செய்யக்கூடிய விஷயம் என்று முழுமையாக நம்புங்கள்.

மூச்சுப் பயிற்சி மேற்கொள்ளுங்கள். நாள்பட்ட பயிற்சி மனதை அமைதியாக்கும், பதற்றத்தைக் குறைக்கும். தெளிவான சிந்தனை தரும்.

எது உங்களைப் பயமுறுத்துகிறதோ அதை ஒரு பரீட்சார்த்தமாகச் சிறிது சிறிதாகப் பயற்சி செய்யுங்கள்.

இதனால் ஆபத்து வரும் என்கிற ஆழ் மனப் பதிவு மாற ஆரம்பிக்கும்.

அப்படியும் பதற்றமான நிலை வரும் போது, சிறிது நேரம் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, ஆழ்ந்த மூச்செடுத்த பின் உங்களிடம் நீங்களே மனதுக்குள் பேசுங்கள். ஏதேதோ செய்துவிட்டோம் இதைச் செய்ய மாட்டோமா என்று விஜய் பாணியில் உங்களை ஊக்கப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஓய்வாக இருக்கும் போது உங்கள் பயத்தை நீங்கள் வெற்றி கொண்டு பெருமிதமாகச் செயல்படுவது போன்று கற்பனை செய்யுங்கள். நீங்கள் நிஜமாகப் பயிற்சி செய்யும் போது உங்கள் கற்பனை காட்சியை மனதில் ஓட்டிப் பாருங்கள். மகிழ்சியும் உத்வேகமும் கூடும்.

மெது மெதுவாக உங்களின் பயத்தில் இருந்து நீங்கள் வெளிவருவதை மகிழ்ச்சியுடன் காணத் தயாராகுங்கள்.

உங்களுக்கு ஒருவேளை எந்தப்பயமும் இல்லையெனில் நீங்கள் கீழே காண்பவற்றில் எங்கு உள்ளீர்கள் என ஆராயுங்கள்.

### வசதி / பாதுகாப்பான வாழ்வு முறை (comfort zone)

இதில் நமக்குப் பயமே கிடையாது, ஏனெனில் எதையும் நாம் புதிதாக ஃ தனியாக முயற்சிப்பதில்லை. எந்த முடிவும் நமது அல்ல. நிறைய பெண்களின் நிலை இது. பாதுகாப்பாக இருப்பதாக நினைத்துக் கொண்டு சிறிய வட்டத்திலேயே வாழ்கின்றனர். வாழ்வே அந்த வட்டத்தைத் தாண்டிதான் இருப்பதை உணர்வதே இல்லை. ஆனால், இது வெறும் வசித்தல், வாழ்தல் அல்ல.

### பய உணர்வுள்ள வாழ்வு முறை (Fear zone)

ஒரு சில பெண்கள் பாதுகாப்பில் இருந்து சற்று வெளியேறி புதிய விஷயங்களைச் செய்ய முயலும் போது, (கற்கும்போது தவறுவது சகஜம்தானே) ஏற்படும் தவறைக் கையாளத் தெரியாமலும், சமூகம் பல காலமாகக் கற்றுத் தந்த தளையினில் மாட்டிக்கொண்டு பயத்தோடே வாழும் நிலை.



### கற்றுக்கொள்ளும் வாழ்வு முறை (Learning zone)

ஒரு சிலர் பயம்தானே தடை, அதை வெல்ல தேவையானவற்றைக் கற்போம் எனக் கற்றுக் கொள்ள ஆரம்பிப்பது. ஆரம்பத்தில் கற்றுக் கொள்வதில் உள்ள சிரமம், மற்றவரின் கேலி பேச்சு போன்றவை இருந்தாலும், நாம் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்கிறோம் என்கிற உற்சாகம் நம்மைச் செயல்படத் தூண்டும்.

### வளர்ச்சியை நோக்கிய வாழ்வு முறை (Growth zone)

பயத்தைத் தாண்டி, கற்றுக்கொள்ள ஆரம்பித்து அதில் வெற்றியும் கண்ட பின் வரும் நிலை. இங்கேதான் கனவுகளுக்குச் சிறகு முளைக்கிறது. பயத்திலிருந்து முழு விடுதலை, நிஜமான வாழ்வு தொடங்குகிறது.

வாருங்கள் தோழிகளே, நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் வளர்ச்சியை நோக்கிய வாழ்வுக்கு முன்னேறுங்கள்.

# நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவர்கள் 100 பேர் மீட்பு




நைஜீரியாவில், கத்தோலிக்க பள்ளியில் இருந்து கடத்தப்பட்ட மாணவர்களில், 100 பேர் மீட்கப்பட்டுள்ளதாக கிறிஸ்துவ குழு தெரிவித்துள்ளது.

மேற்கு ஆப்ரிக்க நாடான நைஜீரியாவின் நைஜர் மாகாணத்தில் உள்ள பாபிரி என்ற இடத்தில், செயின்ட் மேரிஸ் கத்தோலிக்க உறைவிட பள்ளி செயல்படுகிறது.

கடந்த மாதம் 21ம் தேதி, இந்த பள்ளிக்குள் புகுந்த துப்பாக்கி ஏந்திய கும்பல், 300க்கும் மேற்பட்ட மாணவர்களையும், 12 ஆசிரியர்களையும் கடத்திச் சென்றது. அடுத்த சில மணி நேரத்தில், 50 மாணவர்கள் அக்கும்பலிடம் இருந்து தப்பினர்.

இந்நிலையில் தற்போது, 100 மாணவர்கள் மீட்கப்பட்டு உள்ளதாக நைஜீரியாவின் கிறிஸ்துவ சங்கம் தெரிவித்துள்ளது. ஆனால், அவர்கள் எப்படி மீட்கப்பட்டனர் என்பது குறித்த தகவலை அச்சங்கம் வெளியிடவில்லை. (ஐ)

## போரை நிறுத்த ஜெலன்ஸ்கி விரும்பவில்லை உக்ரைன் அதிபர் மீது டிரம்ப் அதிருப்தி



'ரஷ்யா – உக்ரைன் போர் நிறுத்தத்துக்கான முன்மொழிவு மீது உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி முடிவு எடுக்காமல் காலம் தாழ்த்துவது, அவர் போர் நிறுத்தத்தை விரும்பவில்லையோ என்று எண்ண தோன்றுகிறது' என, அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் இடையேயான போர், நான்கு ஆண்டுகளை எட்ட உள்ளது. இந்நிலையில், போரை முடிவுக்கு கொண்டுவர உலக நாடுகள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. இதையடுத்து, காசா – இஸ்ரேல் போர் நிறுத்தத்துக்கு அமெரிக்கா முன்மொழிந்ததைப் போன்றதொரு அமைதி ஒப்பந்தத்தை ரஷ்யா – உக்ரைன் போருக்கும் முன்மொழிந்தது.

இதற்கு, ரஷ்யா முதலில் ஒப்புக்கொண்டது. இந்நிலையில், அமைதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான அம்சங்கள் ரஷ்யாவுக்கு சாதகமாக இருப்பதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, ஒருசில அம்சங்களை மாற்றியமைத்து மீண்டும் அமைதி ஒப்பந்தத்துக்கான முன்மொழிவை அமெரிக்கா வெளியிட்டது. ஒருசில அம்சங்கள் நடைமுறைக்கு ஒத்துவராதவை எனக்கூறி, ரஷ்யா தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த அமைதி ஒப்பந்த முன் மொழிவு குறித்து, மூன்று நாட்களாக அமெரிக்காவின் மியாமியில், அமெரிக்கா மற்றும் உக்ரைன் பிரதிநிதிகளிடையே பேச்சு நடந்து வந்த நிலையில், எவ்வித முடிவுமின்றி முடிந்தது.

இப்பேச்சு நடந்து முடிந்த சில மணி நேரங்களில், அமெரிக்க அதிபர் டிரம்ப் தன் கருத்தை தெரிவித்தார்.

அதில், இந்த அமைதி ஒப்பந்த முன்மொழிவு வரைவை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் குழுவில் உள்ளவர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும், ஜெலன்ஸ்கி அதை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இது தனக்கு சற்று ஏமாற்றத்தை அளிப்பதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் போரை முடிவுக்கு கொண்டு வர விரும்புவதாகவும், ரஷ்யாவுக்கு இதில் எந்த பிரச்னையும் இல்லை என்று தாம் நம்புவதாகவும் டிரம்ப் தெரிவித்துள்ளார். உக்ரைன் அதிபர்தான் பேச்சை தாமதப்படுத்தி வருகிறார் என, டிரம்ப் குற்றஞ்சாட்டினார்.

இந்நிலையில், போரை நிறுத்த அமெரிக்கா முன்மொழிந்துள்ள அமைதி திட்டம் குறித்து, ஐரோப்பிய நாடுகள் லண்டனில் கூடி விவாதிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## சூடானில் 'ட்ரோன்' தாக்குதல்: பலி எண்ணிக்கை 114 ஆக உயர்வு




வட ஆப்ரிக்க நாடான சூடானில், கோர்டோபான் மாகாணத்தின் கலோகி நகரில் உள்ள மழலையர் பள்ளி, மருத்துவமனை, குடியிருப்பு பகுதிகளை குறிவைத்து, ஆர்.எஸ்.எப்., படை கடந்த 5ம் தேதி 'ட்ரோன்' தாக்குதலை நடத்தியது.

இந்த தாக்குதலில், 63 குழந்தைகள், மருத்துவ பணியாளர்கள் உட்பட 114 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

'இது அப்பட்டமான மனித உரிமை மீறல்' என, கண்டனம் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, சூடானில் வன்முறையை முடிவுக்கு கொண்டு வரவும், சுகாதாரம் உட்பட மனிதாபிமான உதவிகளை அதிகரிக்கவும் உலக நாடுகளை வலியுறுத்தி உள்ளது. (ஐ)

## விரும்பும் நாடுகளிடம் கச்சா எண்ணெய் வாங்க இந்தியாவுக்கு உரிமையுண்டு: ரஷ்யா ஆதரவு



இந்தியா இறையாண்மைமிக்க நாடு, பலன் கிடைக்கும் இடத்தில் கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அந்நாட்டிற்கு உரிமை உண்டு என ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதாகக் கூறி இந்தியாவில் இருந்து இறக்குமதி ஆகும் பொருட்களுக்கு அமெரிக்கா வரி விதித்துள்ளது. இதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

கச்சா எண்ணெய் விலையை குறைக்கிறது சவுதி அரேபியா

சில நாட்களுக்கு முன்னர் ரஷ்ய அதிபர் புடின் இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்து சென்றார். அப்போது முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

இந்நிலையில் ரஷ்ய அதிபர் வசிக்கும் கிரெம்ளின் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியதாவது: இந்தியா இறையாண்மை நாடாக இருக்கிறது. அப்படியே நீடிக்கிறது. வர்த்தக தனக்கு பலன் கிடைக்கும் இடங்களில் வர்த்தகம் செய்யவும், கச்சா எண்ணெய் வாங்கவும், இந்தியாவுக்கு உரிமை உண்டு. ரஷ்யாவுக்கு நம்பகமான எரிசக்தி கூட்டாளியாக ரஷ்யா நீடிக்கும் என பிரதமர் மோடியிடம் அதிபர் புடின் கூறியுள்ளார். தங்களது பொருளாதார நலனுக்காக, இதனை இந்தியா இந்த பாதையை தொடர்ந்து பின்பற்றும் என நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## யாழ்.பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர்கள் விண்ணப்பங்களையும், அளிக்கைகளையும் மதிப்பீடு செய்து தனித்தனியாகப் புள்ளிகளை வழங்கினர். பீடாதிபதி தெரிவு குறித்து உள்வாரிப் பேரவை உறுப்பினர் ஒருவரால் சர்ச்சைக்குட்படுத்தப்பட்ட பீடாதிபதி ஒருவர் மதிப்பீட்டில் கலந்து கொள்ளவில்லை. உள்வாரி உறுப்பினர்களாக இருந்த போதிலும், துணைவேந்தர் தெரிவுக்காக விண்ணப்பித்திருந்ததனால் நான்கு பீடாதிபதிகளும் இம்மதிப்பீட்டில் பங்குகொள்ளவில்லை. இதனால் வெளிவாரி உறுப்பினர்களின் செல்வாக்கே மதிப்பீட்டில் அதிகமாக இருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொருவரு விண்ணப்பதாரரும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி முதல் நிலையையும், விவசாய பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான கு.மிகுந்தன், மருத்துவ பீடாதிபதியும், பேராசிரியருமான இ.சுரேந்திரகுமாரன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் நிலைகளையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, பேரவையின் விசேட கூட்டத்தில் விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளி ஒழுங்கில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் படி - ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்து, துணைவேந்தராக நியமனம் செய்வார்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமையிலான சட்டத்தரணிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நீண்ட விவாதம் இடம்பெற்ற நிலையில் இவற்றை ஆராய்ந்த கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் மனு மீதான விசாரணைகள் முடிவடையும் வரை மேயர், பிரதி மேயர் ஆகியோர் அந்தப் பதவிகளை வகிப்பதற்கு வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

வவுனியா மாநகர சபை உறுப்பினர்களான க.பிரேமதாஸ் மற்றும் சு.விஜயகுமார் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்துக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பிரதிவாதிகளாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த மாநகர மேயர் சு.காண்டீபன், ஜனநாயகத் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த பிரதி மேயர் ப.கார்த்தீபன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறித்த மனுவில் வவுனியா மாநகர சபையின் மேயர், பிரதி மேயர் தெரிவின் போது பிரதிவாதிகள் சட்டத்துக்கு முரணான வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பிரதி மேயர் ப.கார்த்தீபன் மாநகர சபை எல்லைக்குள் வசிக்காத ஒருவராக உள்ளார் எனவும், மேற்படி இருவரும் அந்தப் பதவிகளில் இருப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் பதவிகளைச் செல்லுபடியற்றதாக அறிவுக்குமாறு கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜி.சி.ஈ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் கே.எம்.ஜி.எஸ். நாலக்க களுவெவ இதனை இன்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக அறிவிப்புகளைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிடுவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 4 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நான்கு மாவட்டங்களிலும் பல அதி அபாயப் பகுதிகளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது.

இதனையடுத்து, உடனடித் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்களை வெளியேற்றும் நடவடிக்கை இன்று முதல் 19ஆம் திகதி வரை நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை மாவட்ட செயலாளர்கள், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், இலங்கைப் பொலிஸார் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கண்டி மாவட்டத்தில் ஹதரலியத்த, யட்டினுவர, உடுதும்பர, பதஹேவாஹேட்ட, மெததும்பர, பஸ்பாகே கோரள, தெல்தோட்ட, பூஜாப்பிட்டிய, கங்க இஹல கோரள, பன்வில, கங்காவட்ட கோரள ஆகிய பகுதிகளுக்குச் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் உடபலாத, ஹரிஸ்பத்துவ, குண்டசாலை, மினிபே, தொளுவ, தும்பனே, அக்குரனை, உடநுவர, பததும்பர மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் கேகாலை, காலிகமுவ, மாவனல்லை, புலத்கோஹுப்பிட்டிய, அரநாயக்க, எட்டியாந்தோட்டை, ரம்புக்கனை, வரக்காப்பொல மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் மாவத்கம, மல்லவப்பிட்டிய, றிதிகம மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் நாவுல, வில்கமுவ, பல்லேபொல, அம்பன்கங்க கோரள, லக்கல பல்லேகம, உக்குவெல, ரத்தொட்ட, மாத்தளை, யட்டவத்த மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# "ஊடகவியலாளர்களுக்கு சலுகை வேண்டும்"




கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணங்கள், உதவிகள் மற்றும் சலுகை அடிப்படையான கடன் திட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என திகாமடுல்ல மீடியா போரத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலே ஏற்பட்ட புயல், வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்குள்ளான ஊடகவியலாளர்கள் தங்களது நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களையும், இன்னல்களையும் அனுபவித்திருந்தனர். பல்வேறு மாவட்டங்களில் களப்பணியில் ஈடுபடுகின்ற ஊடகவியலாளர்களது ஊடக உபகரணங்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஊடக உபகரணங்களும் செயலிழந்துள்ளன.


இதனால், தங்களது நாளாந்த செய்தி சேகரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாத இன்னல்களுக்கு ஊடகவியலாளர்கள் முகம் கொடுத்திருந்தனர். மேலும் 10 நாட்களுக்கு மேலாக அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் மின்சாரம் தடைபட்டிருந்தமையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களின் ஊடக செயற்பாடுகள் முற்றாக முடக்கம் கண்டிருந்தன. இவ்வாறான நிலைமைகளை கருத்தில் கொண்டு, இந்த இக்கட்டான நிலைமைகளுக்கு மத்தியிலும் தங்களது ஊடக உபகரணங்களின் சேதங்களை கூட பொருட்படுத்தாமல் நாட்டின் நிலைமைகளை ஊடகங்களுக்கு அரிக்கை செய்து இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் இலங்கையினுடைய நிலைமைகளை அறிய செய்வதற்காக, களத்தில் நின்று பணியாற்றிய ஊடகவியலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

அண்மையில் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண செயற்திட்டங்கள் மக்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாக அமைவதுடன், பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தரப்பினரையும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படவுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இந்த நிவாரணப் பொதியின் ஒரு அங்கமாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் ஊடக உபகரணங்கள், சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள், மின்சாரத் தடை மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் இன்மையினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான இழப்பீடுகள், ஊடகவியலாளர்களின் களப்பணிக்கான மோட்டார் சைக்கிள்கள், வீட்டு வசதிகள் மற்றும் உதவிகள் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்" என அவ்அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கடலட்டை பண்ணையாளர்களுக்கு பெரும் அழிவு



டித்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இரணைதீவு கடலட்டை பண்ணையாளர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரணைத்தீவில் 103 கடலட்டை பண்ணையாளர்கள் 125 ஏக்கரில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த நிலையில், இதில் நான்கு இலட்சம் கடலட்டைகள் காணப்பட்டதாக தெரிவித்த அவர்கள். ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக நான்கு இலட்சம் கடலட்டைகள் இறந்துவிட்டதாகவும், இதன் பெறுமதி சுமார் 160 மில்லியன் ரூபாய் எனவும் தெரிவித்தனர்.

அத்தோடு, நான்கு படகுகள், எட்டு வள்ளங்கள், 10 மீனவ குடிசைகள், அட்டை பண்ணை வலை 200, நண்டு வலை 450, பட்டிவலை 150 கூட்டம் என்பனவும் அழிவடைந்துள்ளனதாக இரணைதீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ஐ)

# இந்தியாவிலிருந்து மற்றுமொரு விமானம் வந்திறங்கியது



இந்தியாவில் இருந்து பேரிடர் நிவாரண உதவிகளை ஏற்றிக்கொண்டு மற்றொரு விமானம், செவ்வாய்க்கிழமை (09) அன்று மதியம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. இந்த விமானம் இந்திய விமானப்படையின் மிகப்பெரிய சரக்கு விமானமான ஊ-17 வகையைச் சேர்ந்தது, இந்தியாவின் படங்காஸிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை இந்த விமானம் வந்தடைந்தது. இந்த விமானம் 61 மெட்ரிக் தொன் எடையும், 110 அடி நீளமுள்ள பெய்லி பாலமும், 600 கிலோகிராம் எடையுள்ள மருந்துப் பொருட்களையும் சுமந்து வந்துள்ளது. இந்த நிகழ்வின் போது இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் குழு, வெளியுறவு அமைச்சகம் மற்றும் இலங்கையின் பேரிடர் மேலாண்மை மையத்தின் அதிகாரிகள் குழு ஆகியவை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்தன.(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2025 வெளியிடப்பெற்றது.